# Tamil Theatre Structure and Comparative Method

**V. Gnanambigai**
*Ph.D., Research Scholar (Part Time), P.G. & Research Department of Tamil*
*Arignar Anna Government Arts College, Cheyyar, Tiruvannamalai*

**Dr. K. Venkatesan**
*Associate Professor, P.G. & Research Department of Tamil*
*Arignar Anna Government Arts College, Cheyyar, Tiruvannamalai*

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜனவரி

வருடம்: 2026

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

DOI:
https://doi.org/10.5281/zenodo.18981445

**Abstract**

*Art is a primary component of Tamil life and traditions. The Tamil people possessed a profound understanding of the intricacies of art. Arts not only provide joy to the mind but also serve as keys to understanding the richness of their culture. Among these, street theatre (Therukoothu) has been an integral part of people's lives since ancient times. This art form, mostly performed during auspicious occasions and festivals, is typically staged in a public space. This research paper focuses on examining the structural aspects of this performance space.*

***Keywords:*** *Theatre, Drama, Play, Action, Visuals, Script, Preformance*

**References**

1. Prof. K. Sivathamby, Prof. C. Maunaguru, K. Thilaganathan, Theatre: An Introduction, Late C. Parkunam Memorial Committee, Human Resource Development Centre, Trincomalee.
2. Tholkappiyar, Tholkappiyam (Commentaries by Ilampooranar and Nachinarkkiniyar)
3. Ettuthogai – Purananuru, Paripadal – New Century Book House, Chennai.
4. P. Selvam, History of Tamil Theatre (Modern Theatre and Street Play), University of Chennai, Chennai.
5. K. Parthibaraja, Tamil Performing Arts Tradition
6. Inba Kalai Prakash, Street Play Birds
7. Raja Publications, Tamil Nadu Arts
8. A.N. Perumal, Tamil Drama – A Study, Tamil Publishing House, Chennai.

# தமிழ் அரங்க அமைப்பும் ஒப்பீட்டு முறையும்

***வி. ஞானாம்பிகை***
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு, திருவண்ணாமலை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***முனைவர் க.வெங்கடேசன்***
இணைப் பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு, திருவண்ணாமலை
திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர்

***ஆய்வுச் சுருக்கம்***
*தமிழர் வாழ்வியல் மரபுகளுள் கலை என்பது முதன்மைக்கூறாகும். கலையின் நுட்பமான அறிவுப்புலப்பாட்டினைத் தமிழரினம் பெற்றிருந்தது. கலைகள் மனதிற்கு மகிழ்ச்சி ஊட்டும் கலையாக மட்டுமில்லாமல் பண்பாட்டின் சிறப்பினைப் புலப்படுத்தும் திறவுகளாகவும் விளங்குகின்றன. அதில் தெருக்கூத்து என்பது பழங்காலந்தொட்டு மக்களின் வாழ்வியலில் இருந்து வருவதைக் காணலாம். மங்கல நிகழ்விற்கும் திருவிழாக்களின்போதும் பெரும்பாலும் நிகழ்த்தப்பட்ட இக்கலை வடிவம் பொதுவான அரங்கினை நிகழிடமாகக் கொண்டு நடத்தப்படுவதாக அமைந்திருக்கிறது. அந்தவகையில் இவ்அரங்கின் அமைப்பு முறைகளை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.*
***திறவுச் சொற்கள்:*** *அரங்கு, நாடகம், பிளே, செய்கை, காண்பியங்கள், எழுத்துரு, ஆற்றுகை*

***முன்னுரை***

அரங்கு என்பது மனிதனைச் செய்கை நிலையிற் பார்ப்பது மற்றும் முக்கிய அம்சங்களைக் கொண்டது ஆகும். நிகழ்த்துக்கலை மேடை நாடகங்கள், நடனங்கள், இசை நிகழ்ச்சிகள் நடக்கும் உயர்ந்த இடம் (Stage), காட்சிப்படுத்தும் இடம், கலைகளைக் காட்சிப்படுத்தவும் மக்கள் கூடி பார்க்கவும் உள்ள இடம் (Theatre Play house), பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் சபை, மன்றம், கூட்டம் நடக்கும் கூடம் (Forum), பண்டைய பயன்பாடு, சிலம்பாட்டம், யாகங்கள், பூசைகள் போன்ற நிகழ்வுகள் நடைபெறும் களம் (Play ground Retual site), நவீன பயன்பாடு: திரையரங்கு, பயிலரங்கு (Training hall, cinema hall), அரங்கு வகைகளாவன அடலரங்கு, பாட்டரங்கு, கூத்தரங்கு, நடனவரங்கு, நாடகவரங்கு, நாட்டியவரங்கு, இசையரங்கு, அரங்கேற்று அரங்கு, வேத்தியல் அரங்கு, பொதுவியல் அரங்கு முதலியன ஆகும். (அரங்கு ஓர் அறிமுகம்: ப.4)

இன்று நமக்குக் கிடைத்த முதல் இலக்கண நூலானத் தொல்காப்பியத்தில்,

> **நாடக வழக்கினும் உலகியம் வழக்கினும்**
> **பாடல் சான்ற புலனெறி வழக்கு**
> **(தொல்.பொருள்.நூற்.)**

என்று வழங்கப்பட்டு உள்ளதால் தொல்காப்பியக் காலத்திற்கு முன்பே நாடகம் மக்களிடையே பரலாக இருந்ததைக் காணமுடிகிறது.

தெருக்கூத்துக்கலை மக்களின் வாழ்க்கையில் பலவகை இதிகாச, புராண நிகழ்வுகளை அறிவதற்கும் அதன்வழி நல்லறங்களைப் பேணுவதற்கும் வித்திடுவதாக தெருக்கூத்து அமைந்திருக்கிறது. எண்வகை மெய்ப்பாடுகள் என்பவை மனிதர்களின் அக உணர்வுகள், உடல்மொழியின் மூலம் வெளிப்படும் எட்டு விதமான உணர்ச்சிகளின் வெளிப்பாடுகளாகும்.

***நகையே அழுகை இளிவரல் மருட்கை***
***அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று***
***அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப***
***(தொல்.பொருள்.மெய்.நூற்.1197)***

எண்வகை மெய்ப்பாடுகளையும் வெளிப்படுத்தும் இடமாக “அரங்கு” அமைகின்றது.

அரங்கு என்பதன் பொருள், நாடகம், நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் மேடை அல்லது காட்சிப்படுத்தும் இடம் ஆகும். இது சபை மன்றம், ஆடுகளம், கொட்டகை, திரையரங்கு, பயிலரங்கு மற்றும் விழா நடக்கும் கூடம் போன்ற பல்வேறு சூழல்களில் பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான சொல் ஆகும்.

அரங்கு என்பது ஒரு கலை நிகழ்ச்சியை நிகழ்த்தவும் பார்க்கவும் தேவையான ஒரு அமைக்கப்பட்ட இடத்தைக் குறிக்கும்.

**கூத்தரங்கம்**

தெரு ஓரங்களில் நாற்பது சதுர அடி சமதள அரங்கே கூத்தரங்காகும். இவ்வரங்கு இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒன்று முன் அரங்கு (சபை) மற்றொன்று பின் அரங்கு (கொட்டகை) ஆகும். முன் அரங்கையும் பின் அரங்கையும் ஒரு கறுப்புத் திரை பிரித்து நிற்கும். கறுப்புத்திரையின் முன்னால் ஒரு நீண்ட ஆசனம் போடப்பட்டிஎருக்கும். அதிலே ஆர்மோனியம் வாசிப்பவர், மேளம் அடிப்பவர், முகவீணை வாசிப்பவர், தாளம் போடுபவர், பீறி பாட்டுக்காரர் அமர்ந்திருப்பர். அதற்கும் முன்னால் அதனினும் பதிவாக ஒரு விசுப்பலகை (வாங்கு) இடப்பட்டிருக்கும். பாத்திரங்கள் இதில் அமர்வர். எல்லாம் பாத்திரங்களாற் பயன்படுத்தப்படும் முன் அரங்குக்கும் பின் அரங்குக்கும் இடையே கூத்தர் ஒப்பனை அறையிலிருந்து (கொட்டகை) வரும் வழியுண்டு.

பதிவான விசுப்பலகைக்கு முன்னாலேயே திரை பிடிக்கப்படும் முன் அரங்கின் இருபுறமும் இரு விளக்குகள் வைக்கப்படும். பார்ப்போர் மேடையில் முப்புறமும் நெருக்கமாகச் சூடி இருந்து கூத்தைப் பார்ப்பர். கூத்து மேடை மாவிலைகளாலும் தென்னங் குருத்தோலைகளாலும் பூக்களாலும் அழகு செய்யப்பட்டிருக்கும். முப்பக்கம் பார்வையாளர் இருந்து பார்ப்பினும் இக்கூத்தின் சில ஆட்ட முறைகளையும் கிறுக்கி எனப்படும். ஆட்டத்தையும் பார்க்கையில் இது வட்ட மேடையில் முன்னாளில் ஆடப்பட்டிருக்க வேண்டும்.

**வட்டகளரி**

மட்டக்களப்பிலே இக்கூத்துகள் வட்ட மேடையிலே ஆடப்படுகின்றன. அது வட்டக்களரி எனப்படுகின்றது. கூத்துப் படிக்கத் தொடங்கி அரங்கேறும் வரை மூன்று மேடை வகைகளை இக்கூத்துகள் காண்கின்றன.

**மூன்று வகையான மேடைகள்**

1. பழக்கும்போது அமைக்கப்படும் மேடை. இது பதினைந்து அல்லது இருபது அடி விட்டமுள்ள வட்டத்தில் காலடி உயரத்து மண் இட்டி, அவ்வட்டத்தை உயரமாக்கி அமைக்கப்பட்ட திறந்தவெளி மேடையாக இருக்கும்.
2. சதங்கை அணியும்போதும் கிழமைக்கூத் தின் போதும் அடுக்குப் பார்த்தலின்போதும் அமைக்கப்படும் மேடை. இம்மேடை நான்கு பக்கமும் திறந்ததும் பந்தல் வடிவத்திலும் அமைக்கப்பட்டிருக்கும்.
3. அரங்கேற்று மேடை: இது வட்ட வடிவமானதும் சுற்றிவர ஏழு அல்லது எட்டு கம்புகள் நடப்பட்டதும் மேலே கூம்பு வடிவில் சேலைகளைக் கொய்து கட்டியதுமான திறந்தவெளி மேடையாக அமையும். இம்மேடை நிலமட்டத்தினின்று மூன்று அடிக்கு மேல் உயரமுடையதாய் இருக்கும்.

இம்மூன்று வகை மேடைகளிலும் நாம் காண வேண்டிய பொது அம்சம். அதன் திறந்தவெளித் தன்மையாகும். இம்மேடையமைப்பே கூத்துக்குரிய மேடையமைப்பு என்பதும் எமது புராதன மேடையமைப்பு என்பதும் தெளிவாகின்றது.

**அரங்கு**

அரங்கு நமது கண்முன்னே நிகழ்ந்துக் கொண்டு இருக்கிறது. நடந்துக் கொண்டிருக்கின்ற நிகழ்வுகளை அது காட்டுகின்றது. நாங்கள் ஒரு அரங்கினைப் பார்க்கின்றபோது அங்கு காட்சிகளைக் காண்கின்றோம்.

மாறுகிற காட்சிகளைக் காண்கின்றோம். மாறுகிற ஒலிகளைக் கேட்கின்றோம். எங்களுடைய மனம் அந்தக் காட்சிகளையும் ஒலிகளையும் பதிவு செய்து கொள்கின்றது. இவை எல்லாமே ஒருகணத்தினுள் இணைந்து கொள்கின்றன. குறிப்பிட்ட வேளையிலுள்ள இணைந்துக் கொள்கின்றன. இதனாலே தான் அரங்கு என்பது இந்தக் கணக்கை நமக்கு பிரக்ஞை பூர்வமாகத் தருவதாக அமைகின்றது. அதாவது **"இப்பொழுது"** The "how" நடந்து கொண்டிருப்பதைப் பற்றிய உணர்வினைத் தருகின்ற கலை வடிவம் அரங்குதான். அரங்கு என்பது மிக முக்கியமானது ஒன்றாகும்.

அரங்கு என்பது அது சம்பந்தப்பட்ட முழுவதையும் இணைத்துக்காட்டுவது, யார் காட்டுகிறார்கள், எவ்விடத்திலே காட்டப்படுகின்றது, எவ்வாறு காட்டப்படுகின்றது, யார் முன்னே காட்டப் படுகிறது, எந்தச் சூழலில் காட்டப்படுகின்றது போன்ற எல்லாவற்றையும் அரங்கு உள்ளடக்கியுள்ளது. ஆங்கிலத்தில் இதற்கு "தியேட்டர்" (Theatre) என்கின்ற சொல்லைப் பயன்படுத்துகின்றார்கள். "தியேட்ரோன்" என்கின்ற கிரேக்கச் சொல்லடியாக வருவது இது. "தியேட்ரோன்" என்றால் பார்க்கின்ற இடம் ஆகும். இது ஏன் "பார்க்கப்படும் இடம்" ஆகின்றது என்றால் அங்கு ஏதோ நடந்து கொண்டு இருக்கின்றது. எனவே அரங்கு என்பது ஆற்றப் படுகின்ற நிகழ்ந்துக் கொண்டிருக்கின்ற நிகழ்வுகளை ஒரு பார்வையாளர் குழுவுக்குக் காட்டுவதாகும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. உணர்ச்சிகளின் கொந்தளிப்பு (மோதுகை) அரங்கு என்பது மனிதர்கள் பற்றியது அவர்களுடைய மோதுகிற உணர்வுகள் பற்றியது. அது ஏதோ ஒரு இடத்தில் வைத்து நிகழ்த்திக் காட்டப்படுகிறது. (பே.கா.சி வத்தம்பி, பேரா.சி.மௌனக்ரு, க.திலகநாதன் - அரங்கு ஓர் அறிமுகம், ப.4)

## ஆடற்களம்

கூத்தப்பள்ளி, கூத்தம்பலம் என்ற சொற்கள் கூத்து ஆடும் களத்தைக் குறிப்பனவாக அமைந்து ள்ளன. நாடக மேடையில் கலைஞர்கள் தங்கிக் கூத்தாடும் இடத்திற்குக் "கண்ணுளர் குடிஞைப் பள்ளி" என்ற பெயர் வழங்கப்பட்டமையைச் சம்பந்த முதலியார் எடுத்துக்காட்டுகிறார். (நாட கத்தமிழ், பக்.23,25)

தமிழகத்தின் மிகப்பழமையான அரங்கக்கலை வடிவம் தெருக்கூத்து ஆகும். தெருக்களையே ஆடுகளமாகக் கொண்டு நிகழ்த்தப்படுவதால் தெருக்கூத்து எனப் பெயர் பெற்றது. (இன்ப கலை பிரகாஷ், தெருக்கூத்துப் பறவைகள், ப.113)

## தமிழ் அரங்க அமைப்பு

தமிழ் இலக்கியங்களான சங்க இலக்கியங்கள், காப்பியங்கள் போன்ற இலக்கியங்களில் அரங்கு பற்றிய குறிப்புச் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

## பரிபாடல்

**"பாணர் வண்டினம் யாழிசை பிறக்கப்**
**பாணி முழுவினை அருவி நீர் ததும்ப**
**ஒருங்கு பரந்தலை எல்லா மொலிக்கும்**
**இரங்கு முரசின் குன்று" (பரிபாடல்.21:35)**

ஓர் உயர்ந்த மேட்டினில் வேண்டா பகுதிகளை நீக்குவதற்கு அரக்கியும் (தேய்த்து) கெட்டிப் படுத்துவதற்கு அரக்கியும் செய்யப்பட்டது அரங்கு ஆகும். மேலே குறிப்பிட்டுள்ள பரிபாடலில் அரக்கிச் செய்யப்பட்டது "அரங்கு" எனக் கூறப்பட்டுள்ளது. (தமிழகக் கலைகள்: ப.43, இராஜா பப்ளிகேஷன்ஸ்)

## புறநானூறு

புறநானூற்றின் 28ஆம் பாடலில் கூத்தாடு களத்தைக் குறிப்பிட்டு பேசுகிறது. "கூத்தர் ஆடுகளம் கடுக்கும் அகநாட்டையே" என்கிறது.

## திருக்குறளில் கூத்து

**கூத்தாட் டவைக் குழாத்தற்றே பெருஞ்செல்வம்**
**போக்கும் அதுவிளிந்தற்று (குறள்.332)**

இதன்மூலம் வள்ளுவர் காலத்தில் கூத்துக்கலை மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டு வந்துள்ளது என்பதை அறிகிறோம்.

## சிலப்பதிகார அரங்க அமைப்பு

**"நூல்நெறி மரபின் அரங்கம் அளக்கும்**
**கோல்அளவு இருபத்து நால்விரல் ஆக"**

நாடக அரங்கம் அமைப்பது பற்றி மிக விரிவாகவும் நுணுக்கமாகவும் இளங்கோவடிகள்

கூறியுள்ளார். மாதவியின் ஆடல் அரங்கு, அரங்கம் முழுவதும் புகழ்மிக்க முத்து மாலைகளான சரியும், தூக்கும், தாமமும் அழகுப்படத் தொங்கவிட்டனர். "விருந்துபடக் கிளந்த அருந்தொழில் அரங்கத்து" இவ்வாறு புதுமையான அரிய வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பெற்றது. (தமிழ் நிகழ்த்துகலை மரபு: )

சிலம்பில் காணப்படும் நாடக மேடை அமைப்பு முறை (15ஆம் நூற்) வரையிலும் கூட, ஆங்கில நாட்டு மேதைகள் காணாத புதுமையாகும் என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும். அரங்குசார் செய்திகளை ஒப்பிட்டுக் காட்டுகிறார். (இன்ப கலை பிரகாஷ்: தெருக்கூத்துப் பறவைகள்)

நாடக மேடை என இக்காலத்தில் வழங்கப்படும் இடம் சிலப்பதிகாரத்தில் ஆடுகளம், ஆடலரங்கு, ஆடிடம் என்ற சொற்களால் குறிக்கப்படுகிறது. அரங்கம் அமைக்கப்படும் அளவுகளும் கூறப்பட்டுள்ளன. ஆடலரங்கில் மூவகைத் திரைகள் கட்டப்பட்டிருந்தன். "எழினி" என்ற திரையைக் குறித்தது.

**ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்**
**கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு**

ஒருமுக எழினி என்பது ஒருபக்கம் தள்ளக்கூடிய திரையாகும். பொருமுக எழினி என்பது இடையில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இரண்டு பக்கமும் தள்ளக்கூடிய திரையாகும். கரந்துவரல் எழினி என்பது மேலே கட்டப்பட்டுக் கீழே இறங்கி வரவும் மேலே மறைந்து செல்லக்கூடியதுமான திரையாகும்.

சிலம்பில் அரங்கேற்றக் காதையில் அரங்கின் அமைப்பு கூறப்படுகின்றது. நாகரிகமும் நவீன இயந்திர வசதிகளும் இக்காலத்தில் கூட அரங்கம் இவ்வளவு நீளம், இவ்வளவு அகலம், இவ்வளவு உயரம் என்று வரையறையில்லை. இருக்கும் இடத்திற்குத் தகுந்தாற்போல் அரங்கங்கள் அமைக்கப்பெற்றன. ஆனால், சிலம்பு அரங்கின் அளவு குறித்து,

**கண்ணிடை ஒருசாண் வளர்த்துக் கொண்டு**
**நூல் நெறி மரபின் அரங்கம் அளிக்கும்**
**கோல் அளவு இருபத்து நால் விரலாக**
**எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து**
**ஒருகோல் உயரத்து உறுப்பினதாகி**
**உத்திரப் பலகையோடு அரங்கி பலகை**
**வைத்து இடைநிலை நூற்கோலாக**
**ஏற்ற வாயில் இரண்டுடன் பொலியத் தோன்றிய**
**அரங்கு (சிலம்பு.அரங்கு:95-106)**

இவ்வாறு அரங்கின் அளவு குறித்து சிலப்பதிகாரம் கூறியுள்ளது.

### சீன அரங்குகள்

சீன அரங்குகள் பண்டைய நாளில் திறந்தவெளி மேடைகளாகவே இருந்தன. நாடகமேடை இரசிகர்களை நோக்கி நீண்ட வடிவில் அமைக்கப்பட்டிருக்கிறது.

### ஜப்பானிய அரங்குகள்

ஜப்பானில் புகழ்பெற்ற நேர் நாடகங்கள் புற மேடைகளில் நடிக்கப்பட்டன. இம்மேடை சதுரமாக அமைந்து மூன்று பக்கமும் திறந்திருக்கும் மேடையின் ஒரு பக்கம் பாடகர்களுக்கும் கோரஸ் பாடுவோர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கும்.

### ரோமன் நாட்டு அரங்குகள்

பண்டையக் காலத்தில் ரோமனில்தான் முதன் முதலாக கல்லாலான அரங்கம் கட்டப்பட்டது. சமமான நிலத்தில் கட்டப்பட்ட அரங்கம் இதுவாகும். நாடக அரங்கம் அரை வட்ட வடிவில் வடிவமைக்கப் பட்டிருந்தது. நாடக மேடை தாழ்வாகவும் ஆழமாகவும் அமைக்கப்பட்டிருக்கும். நாடகத்திரை இங்குதான் முதன்முதலாக மேடையில் கையாளப்பட்டது.

### ஸ்பெயின் அரங்குகள்

கி.பி.15, 16ஆம் நூற்றாண்டுகளில் ஸ்பெயின் நாடக மேடைகள் தோன்றின. ஸ்பெயின் மேடைகளில் முற்றம் அமைத்திருப்பார்கள். கி.பி.20ஆம் நூற்றாண்டில் ஸ்பெயினில் நிறுவப்பட்ட நவீன அரங்கம் "குரேரோ" என்பதாகும். "டியட்டரோரியல்" என்பது நல்ல வசதிகள் நிறைந்த பெரிய அரங்கமாகும்.

### இந்திய நாடக அரங்குகள்

அரங்கத்தின் பின்பகுதி இரண்டாகப் பிரிக்கப் பட்டு ஒரு பக்கத்தில் நடிகர்கள் வேடம் புனையும் இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இது "நேபத்தியகிரகம்"

எனப்பட்டது. இதன் பின் பகுதி இரண்டாகப்பட்டு ஒரு பகுதி "ரங்கசிரஸ்" என அழைக்கப்பட்டது. முழு அரங்கம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு நடுவில் உள்ளது."ரங்கபீடம்" இதுதான் நடிகர்கள் நடிக்கும் நாடகமேடை.

ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் நிகழ்ந்த அரங்க அமைப்பு மையத்தில் திறந்த முற்றத்தைச் சுற்றி மூன்று மாடிகளைக் கொண்டது. ஆடுகளம் ஏழு களங்களாக அமைக்கப்பட்டமையால் தளம் காலம் ஒருமைப்பாட்டைக் கிரேக்க நாடகத்தின் பழைய நியதிகளின்படி காணமுடியும். இன்று அரங்கப்படைப்பின் கலையாக்கம் ஒரு புதிய மரபுகளை ஆக்கும்போது அவற்றுள் அடங்கிய ஓர்ஒயிலாக்கப்பின்னணியிலும்அடங்கியுள்ளது. (சே.இராமானுஜம், மௌனக்குறம், ப.49, 1994)

## தற்கால தமிழ் நவீன அரங்குகளின் அமைப்பு

இன்று நிகழ்த்தப்படுகின்ற நவீன நாடகங்கள் வீதி நாடகங்கள் போன்றவைகளில் அரங்க அமைப்புகள் யாவிலும் கூத்திற்கான தன்மைகள் காணப்படுகின்றன. கூத்துப்பட்டறை, பல்கலை அரங்கம், மௌனக்குரல், சென்னைக் கலைக்குழு இன்றும் எண்ணற்ற நவீன அரங்கில் அமைப்பு முறைகள் காணப்படுகின்றன.

## முடிவுரை

அரங்கு ஓர் மக்கள் இணைப்புச் சாதனமாக நமது மரபில் அங்கம் வகிக்கிறது. மக்களுக்கு பரிட்சையமான ஒரு கதை வடிவம் அரங்கு மக்களுக்கு ஒரு கட்டமைப்பு முறையாக விளங்குகிறது. அவர்களால் அரங்கு ஆற்றவும் முடியும். அரங்கைப் பார்க்கவும் முடியும் "ஒகஸ்தா போல்" அரங்கின் தொடர்பு வலிமைப்பற்றி பின்வருமாறு கூறுகிறார். குறிப்பாக அரங்கு ஏனைய கலைகளை விட சமூகத்தால் மிக இறுக்கமான முறையில் நிர்ணயிக்கப்படும் ஒன்றாக உள்ளது. பொது மக்களோடு அது கொள்ளும் நெருக்கமான தொடர்பும் நம்ப வைப்பதில் அது கொண்டுள்ள வலிமையே அதற்குக் காரணமாக அமைகிறது.

## துணைநூல் பட்டியல்


1. பேரா.கா.சிவத்தம்பி, பேரா.சி.மௌனகுரு, க.திலகநாதன், அரங்கு ஓர் அறிமுகம், அமரர் சி.பற்குணம் நினைவு மலர்குழு, மனிதவள மேம்பாட்டு நிலையம், திருகோணமலை.
2. தொல்காப்பியர், தொல்காப்பியம் (இளம்பூரணர், நச்சினார்க்கினியர் உரைகள்)
3. எட்டுத்தொகை - புறநானூறு, பரிபாடல் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
4. பெ.செல்வம், தமிழ் அரங்க வரலாறு (நவீன அரங்கமும் தெருக்கூத்தும்), சென்னை பல்கலைக்கழகம், சென்னை.
5. கி.பார்த்திபராஜா, தமிழ் நிகழ்த்துக்கலை மரபு
6. இன்ப கலை பிரகாஷ், தெருக்கூத்துப் பறவைகள்
7. ராஜா பப்ளிகேஷன்ஸ், தமிழகக் கலைகள்
8. ஏ.என்.பெருமாள், தமிழ் நாடகம் - ஓர் ஆய்வு, தமிழ்ப் பதிப்பகம், சென்னை.
9. திருவள்ளுவர், திருக்குறள், நிலையாமை, அதிகாரம் 34